மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்
முன்னிலை – செல்வி. அ. இலக்கியா, பி.பி.ஏ., எல்எல்.பி.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சாத்தூர்
2025 ம் ஆண்டு ஜுலை திங்கள் 09 ம் நாள் புதன்கிழமை
இடைநிலை மனு எண். 14/2024
இன்
அசல் வழக்கு எண்.12/2017
–––––––

ஷாஜஹான்
(மேற்படியாரின் அங்கீகாரம் பெற்ற
முகவர் காதர் பாஷா மூலம்) .. மனுதாரர்/வாதி

/எதிர்/

1) ருக்மணி
2) கிருபாகரன்
3) சித்ரலேகா
4) சந்திரிகா
5) சாந்தினி
6) கார்த்திகேயினி
7) சிவக்குமார்
8) உஷாதேவி
9) சரவணநாதன்
10) M. வேலுச்சாமி
11) சார்பதிவாளர், சாத்தூர்
12) மாவட்ட பதிவாளர்,
விருதுநகர். .. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த மனுவானது இறுதியாக என் முன்பாக 30.06.2025 அன்று விசாரணைக்காக வந்த போது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. S. இராஜேஸ், பி.ஏ., பி.எல்., அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 10 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. V. A. விஸ்வநாத், பி.ஏ., பி.எல்., அவர்கள் ஆஜராகியும், 11, 12 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பிலும் நிகழ்த்திய வாதுரை, மனு, அபிடவிட்டு, எதிருரை ஆகியவற்றைப் பரிசீலித்தும் இதுநாள் வரையில் என் சீரிய

பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்,

**<u>உத்தரவு</u>**

இந்த மனுவானது பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியை திரும்ப அழைக்க வேண்டியிருப்பதால் முடிக்கப்பட்ட பிரதிவாதிகள் தரப்பு சாட்சியை மீண்டும் அழைக்க வேண்டியிருப்பதால் முடிக்கப்பட்ட பி.வா.சா.1—யை மறுதிறவு செய்து உத்தரவிட வேண்டி பிரிவு 151 உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>மனுதாரர்/வாதி தரப்பு மனுவின் சுருக்கம்</u>**—

**2.1.** மனுதாரர் இந்த வழக்கின் வாதியின் அங்கீகாரம் பெற்ற முகவர் ஆவார். 1 முதல் 10 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் கடந்த 25.09.2008ம் தேதி 11ம் பிரதிவாதி அலுவலகத்தில் ஆவண எண்.7698/2008—ன் கீழ் ஏற்படுத்திய கிரையப் பத்திரம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல மற்றும் அவை வெறிதானது மற்றும் விழலானது என விளம்புகை செய்யக்கோரியும், மேற்படி கிரையப் பத்திரத்தை 11ம் பிரதிவாதி ரத்து செய்யும் பொருட்டு செயலுறுத்துக் கட்டளை பிறப்பிக்கவும் அதனை தொடர்ந்து இதர பரிகாரங்களுக்காகவும் தாவா அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளார்.

**2.2.** அசல் வழக்கில் கடந்த 06.03.2023ம் தேதி பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சி நீதிமன்றத்தில் ஆஜராகி 1ம் பிரதிவாதி இறந்துவிட்டதாக தெரிவித்ததன் அடிப்படையில் மேற்படி 1ம் பிரதிவாதியின் வாரிசுகள் அனைவரும் தாவா அசல் வழக்கில் தரப்பினர்களாக இருப்பதாக தெரிந்ததின் அடிப்படையில் 1ம் பிரதிவாதியின் இறப்பு குறித்து மட்டும் தாவா அசல் வழக்கின் பிராதில் குறிப்பிடப்பட்டு தாவா அசல் வழக்கின் பிராது சீர்திருத்தம் செய்யப்பட்டது. அதன்பின்னிட்டு மேற்படி சீர்திருத்த மனு அனுமதிக்கப்பட்டதுடன் கடந்த 01.08.2023ம் தேதி பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியை குறுக்கு விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டிருந்த நிலையில், ஷையார் நீதிமன்றத்தில் ஆஜராகாத காரணத்தால் மேற்படி சாட்சி முடிக்கப்பட்டு பிரதிவாதி

தரப்பு 1ம் சாட்சி வாதிகள் தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படாமல் இருந்து வருகின்றார்.

**2.3.** ஷை பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியை குறுக்கு விசாரணை செய்தால் மட்டுமே தாவா அசல் வழக்கில் வாதி தரப்பு கட்சியை நீதிமன்றத்திற்கு தெளிவுபடுத்த இயலும். மேலும் தாவா வழக்கையும் முழுமையாகவும் தீர்மானிக்க இயலும். அதன் காரணமாக பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியை ரீ–கால் செய்ய வேண்டியிருப்பதால் முடிக்கப்பட்ட பிரதிவாதிகள் தரப்பு சாட்சியை ரீ–ஓபன் செய்து உத்தரவிட வேண்டியதாக உள்ளது. அவ்வாறு இல்லாவிட்டால் மனுதாரருக்கு ஏராளமான கஷ்ட நஷ்டம ஏற்படக்கூடும். தாவா அசல் வழக்கையும் முழுமையாக தீர்மானிக்க இயலாத நிலையும் ஏற்படக்கூடும். எனவே மனு தாக்கல்.

3. **<u>11ம் எதிர்மனுதாரர்/ பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்</u>**

**3.1.** மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவானது சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாகும். தாவா அசல் வழக்கானது செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி அசல் வழக்கில் கடந்த 01.08.2023ம் தேதியில் வாதி தரப்பு சாட்சியம் அளிக்கப்பட்டது. அதன் பின்னர் பல்வேறு தேதிகளில் கூடுதல் சாட்சியத்திற்காக வாய்தா ஏற்பட்டிருந்த நிலையில் கூடுதல் சாட்சியம் இல்லை என்று நீதிமன்றமானது முடித்துவிட்டது. இந்நிலையில் வாதி தரப்பில் சாட்சிய விசாரணை செய்யப்படாமல் உள்ளது. தாவா மனுதாரரால் வேண்டுமென்றே செய்யப்பட்டவையாகும். தாவா மனுதாரர் அசல் வழக்கை காலதாமதம் செய்ய வேண்டுமென்பதற்காகவே சாட்சியை குறுக்கு விசாரணை செய்யாமல் இருந்துவிட்டு தாவா மனு தாக்கல் செய்துள்ளது ஏற்றுக்கொள்ளக்கூடியதில்லை. எனவே மனுதாரர் மனுவானது எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டப்படுகிறது.

**4.** மனுதாரர் மனுவில் கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத் தக்கதா?

**5.** மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எந்த சாட்சியும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**6. தீர்வு**

**6.1.** மனு பரிசீலிக்கப்பட்டது. மனுவில் மனுதாரர்/வாதியின் அங்கீகாரம் பெற்ற முகவர் ஆவார். 1 முதல் 10 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் கடந்த 25.09.2008 ம் தேதி 11 ம் பிரதிவாதி அலுவலகத்தில் ஆவண எண்.7698/2008—ன் கீழ் ஏற்படுத்திய கிரையப் பத்திரம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல மற்றும் அவை வெறிதானது மற்றும் விழலானது என விளம்புகை செய்யக்கோரியும், மேற்படி கிரையப் பத்திரத்தை 11 ம் பிரதிவாதி ரத்து செய்யும் பொருட்டு செயலுறுத்துக் கட்டளை பிறப்பிக்க கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பி.வா.சா.1 ஐ வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்வதற்கு 01.08.2023 ம் தேதி வாய்தா ஏற்பட்டிருந்த நிலையில், மனுதாரர் உரிய நேரத்தில் பி.வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்யாததற்கு குறிப்பிடும் காரணம் என்னவென்றால், பி.வா.சா.1 நீதிமன்றத்தில் ஆஜராகாத காரணத்தால் மேற்படி பி.வா.சா.1, வாதி தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படாமல் இருந்து வருகின்றார். ஷை பி.வா.சா.1—யை குறுக்கு விசாரணை செய்தால் மட்டுமே தாவா அசல் வழக்கில் வாதி தரப்பு கட்சியை நீதிமன்றத்திற்கு தெளிவுபடுத்த முடியும், தாவா வழக்கையும் முழுமையாகவும் தீர்மானிக்க இயலும். எனவே ஷை சாட்சியை மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்ய வேண்டியிருப்பதால் முடிக்கப்பட்ட பிரதிவாதிகள் தரப்பு சாட்சியை ரீ—ஓபன் செய்து உத்தரவிட வேண்டியதாக உள்ளது. அவ்வாறு இல்லாவிட்டால் மனுதாரருக்கு ஏராளனமான கஷ்ட நஷ்டம் ஏற்படக்கூடும் என்பதால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**6.2.** 11 ம் எதிர்மனுதாரர் தன்னுடைய ஆட்சேபணையில், அசல் வழக்கில் கடந்த 01.08.2023 ம் தேதியில் வாதி தரப்பு சாட்சியம் அளிக்கப்பட்டும், பின்னர் பல்வேறு தேதிகளில் கூடுதல் சாட்சியத்திற்காக வாய்தா ஏற்பட்டிருந்த நிலையில்

கூடுதல் சாட்சியம் இல்லை என்று நீதிமன்றமானது முடித்துவிட்டது. மனுதாரர் அசல் வழக்கை காலதாமதம் செய்ய வேண்டுமென்பதற்காக தாக்கல் செய்துள்ள மனு ஏற்றுக்கொள்ளக்கூடியதில்லை என்பதால் மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்பட்டுள்ளது.

**6.3.** மனுதாரர் கடந்த 01.08.2023ம் தேதி பி.வா.சா.1 குறுக்கு விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டிருந்த நிலையில் பி.வா.சா.1 நீதிமன்றத்தில் ஆஜராகாத காரணத்தால் முடிக்கப்பட்டுள்ளது. அதன்பின்பு பி.வா.சா.1–யை விசாரணை செய்தால் மட்டுமே தாவா அசல் வழக்கில் வாதி தரப்பு கட்சியை தீர்மானிக்க இயலும். எனவே பி.வா.சா.1–யை ரீ–ஓபன் செய்து உத்தரவிட வேண்டி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் மனுதாரர் மனுவிற்கான போதிய காரணம் சொல்லாத நிலையிலும், வழக்கின் சூழ்நிலை மற்றும் சங்கதிகளை கருத்தில் கொண்டு பி.வா.சா.1ஐ குறுக்கு விசாரணை செய்வதற்கு மனுதாரருக்கு ஒரு வாய்ப்பளிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என இந்நீதிமன்றம் கருதுவதால் எதிர்மனுதாரர்களுக்கு ஏற்பட்ட கால விரயத்திற்கு மனுதாரர் செலவுத் தொகை வழங்க வேண்டுமென்ற நிபந்தனையுடன் பிரதிவாதிகள் தரப்பில் முடிக்கப்பட்ட சாட்சியத்தை மீண்டும் மறு திறவு செய்ய அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**7. இறுதி முடிவு**

இறுதியாக மனுதாரர், எதிர்மனுதாரர்களுக்கு செலவுத் தொகை ரூ.500/–ஐ 18.07.2025ம் தேதிக்குள் செலுத்தும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என்றும், தவறும்பட்சத்தில் இம்மனு தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. அழைக்க வாய்தா 18.07.2025.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக கூறப்பட்டு அவரால்

கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, **2025 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 09-ம்** நாள் கையொப்பமிட்டு, இந்நீதிமன்றத்தால் அவையறிய பகரப்பட்டது.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்துார்.

**சாட்சி, சான்றாவணங்கள்**

**மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்**

இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்**

இல்லை.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்துார்.

மாவட்டஉரிமையியல் நீதிமன்றம்,
சாத்துார்.
இ.ம.எண்.14/2024
இன்
அ.வ.எண்.12/2017
**உத்தரவு**
நாள்-09.07.2025.